## பாடம் இரண்டு



# இயேசு எதை போதித்தார்?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## அவர் பாவிகளுக்கு கடவுளின் அன்பை போதித்தார்

நீங்கள் உங்கள் பள்ளிப்படிப்பின் ஆசிரியர்களை நினைவு கூறுகிறீர்களா? சிலர் நல்லவர்களாக இருந்து நீங்கள் அவர்களிடம் நிறைய கற்றுக்கொண்டிருக்கலாம். இயேசுவும் ஒரு நல்ல ஆசிரியர்.[1] அவர் தன்னுடைய போதனைகளில் அதிகமான உவமைகளை பயன்படுத்தினார். அந்த உவமைகள் யாவும் மறைபொருளோடு கூடிய ஆர்வமிக்க கதைகளாக இருக்கின்றன.



ஒரு நல்ல ஆசிரியர்

இயேசு கூறிய உவமைகளில் மூன்று, நம்மைப்போன்ற பாவம் நிறைந்த மனிதர்களுடன், மீண்டும் சந்தோஷத்துடன் கிடைக்கப்பெற்ற காணாமற்போன பொருள்களுக்கு ஒப்பிடப்படுகின்றன.[2] இம்மூன்று உவமைகளிலிருந்தும் கற்றுக்கொள்ளும் பாடம் தெளிவானது. அது என்னவெனில் தொலைந்துபோன பாவிகள் கடவுளின் வீட்டை வந்தடையும்போது மோட்சத்தில் சந்தோஷமுண்டாயிருக்கும் என்பதே.

### கடவுள் காணாமற்போன பாவிகளைத் தேடுகிறார்

முதல் உவமை ஒரு மேய்ப்பனால் தேடி மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட, காணாமற்போன ஒரு ஆட்டை பற்றியது. இந்த உவமையில் (இதற்கடுத்த உவமையிலும்) பாவிகள் கடவுளை தேடுவதைப்பற்றியல்ல, கடவுள் பாவிகளை தேடுவதைப் பற்றி பேசுகிறது.[3] லூக்கா 15:3-7 படிக்கவும்; 6ம் வசனத்தை எழுது

… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …

காணாமற்போய் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஆடு

இரண்டாவது உவமை இயேசு கிறிஸ்து அந்த மேய்ப்பனைப்போல் இருக்கிறார். லூக்கா 19 : 10ஐ பார்க்கவும்.

… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …

### காணாமற்போன பாவிகளை கடவுள் ஏற்றுக்கொள்கிறார்

மூன்றாவது உவமை மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்த ஒரு மகனைப்பற்றியது. அவன் தன்னுடைய பாவத்தை உணர்ந்தபோது, அவனுடைய தந்தை அவனை தன் வீட்டில் வரவேற்று ஏற்றுக்கொண்டார். அந்த மகன் வாழ்க்கையில் தன் வழியைத் தவறிவிட்டான். இந்த உவமையில் கடவுள் தந்தையோடு ஒப்பிடப்படுகின்றார். நாமும் நம்முடைய பாவத்தை அறிக்கையிடும்போது கடவுள் சந்தோஷத்தோடு நம்மைத் திரும்ப ஏற்றுக்கொள்கிறார். லூக்கா 15:21-24ஐ படிக்கவும், 24ம் வசனத்தை எழுதவும்.

காணாமற்போய் திரும்பவும் வீட்டிற்குத் வந்த மகன்.

… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …
… … … … … … … … … … … … … … … … …

இந்த உவமை மனந்திரும்புதலைப் பற்றி போதிக்கிறது. மனந்திரும்புதல் என்பது பாவத்தை தள்ளிவிட்டு கடவுளிடம் வந்து சேருவதே ஆகும். நாம் இதைக்குறித்து மேலும் பாடம் 6-ல் தெரிந்து கொள்வோம்.

---

1 இயேசு அதிகாரத்தோடு போதித்தார் (லூக். 4:32) அதோடு எதிராளியை கவரும் வண்ணமாகவும் போதித்தார். லூக். 4:22.

2 லூக். 15:1-7 (காணாமற் போன ஆடு) 8-10 (காணாமற்போன காசு) 11-32 ( காணாமற்போன மகன்)

3 கடவுள் பாவிகளை தேடி காப்பாற்றவில்லையென்றால் பாவிகள் தொலைந்தவர்களாகவேயிருப்பர். எபேசியர் 1:4ஐ பார்க்கவும்.



மகிழ்ச்சியின் பிரமாணங்கள்

இப்பொழுது அவரது போதனையின் மற்ற கோணங்களைக் காண்போம்.

# அவர் கடவுளின் கட்டளையை எடுத்துரைத்தார்

மனித சட்டங்களெல்லாம் ஒரு சந்தோஷமான வாழ்க்கையை உருவாக்கத் திட்டமிட்டவைகள். சட்டம் என்ன சொல்லுகிறது என்றால் சாலையின் ஒரு பக்கமாக சென்றால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். அதோடு திருட்டைத் தடுக்கும் சட்டங்கள் நம்முடைய சொத்துக்கள் பறிபோகாமல் பாதுகாக்கின்றன. கடவுளுடைய கட்டளைகள் கூட நம்முடைய சந்தோஷத்திற்காகவே உள்ளன என்று கருதலாம். ஆனால் கடவுளுடைய நிலை நம்முடைய நிலையைக் காட்டிலும் உன்னதமானதாகும்.

### நாம் பூரண சற்குணராயிருக்கும்படி இயேசு போதித்தார்

நாம் கடவுளைப்போலவே மிக நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று போதித்தார். ஒரு வேளை அது முடியாத ஒன்றாக தோன்றலாம் ஆனால் இதற்காகத்தான் நாம் ஆரம்பத்தில் படைக்கப்பட்டோம். மத்தேயு 5:48ஐ பார்க்கவும்.




... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### இயேசு கடவுளின் கட்டளையை விரிவாக போதித்தார்

கடவுளுடைய கட்டளையானது நாம் சிந்திக்கின்ற, சொல்லுகின்ற, மற்றும் நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றையும் பற்றியது என்பதை அவர் நமக்கு தெளிவுபடுத்துகிறார்.[4] மத்தேயு 5:28ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

நாம் கடவுளிடத்திலும் மக்களிடத்திலும் உண்மையாக அன்பு கூர்ந்தால், கடவுளுடைய கட்டளைகளைச் செய்வோம் என்று இயேசு கூறினார்.

### இயேசு அன்பின் முக்கியத்துவத்தை போதித்தார்

எதிரிகளிடம் அன்பு செலுத்துதல்

நாம் கடவுளையும், மனிதரையும் உண்மையாக நேசித்தால் கடவுளுடைய கட்டளை நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றதோ அதை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம்.[5] நாம் யாவரையும் நேசிக்கிறோம் என நினைக்கலாம் - ஆனால் நாம் நம் பகைவர்களை நேசிக்கின்றோமா? மத்தேயு 5:44ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



அவர் சிலுவையில் பாடுபடப்போகிறார்

# அவர் தான் பாடுபடவேண்டும் என்பதை போதித்தார்.

ஒரு நாள் நிச்சயம் நாம் இறக்கப்போகிறோம் என நாமெல்லாரும் அறிவோம். ஆனால் நாம் சாகும் நோக்கத்துடன் பிறப்பதில்லை. நீண்ட காலம் வாழ்வோம் என்றுதான் பிறக்கிறோம், இறப்பு என்பது வரவேற்க தகாத ஒரு நிகழ்வுதான்.

இயேசுவோ மாறாக, அவருடைய பிறப்பிற்கு முக்கிய காரணமே அவரின் இறப்புதான் எனக் கூறினார். யாரும் அனுபவித்திராத, மிகவும் வேதனையான, அவமானத்திற்குரிய இறப்புகளில் ஒன்றான சிலுவையில் அறையப்பட்டு உண்டாகும் கொடிய மரணத்தை இயேசு எதிர்நோக்கி இருந்தார். இது ஒரு ஆச்சரியமான முன்னறிதல் ஆகும். இயேசுவைப் போல இரக்கமுள்ள ஒருவரை கொல்ல எவனாகிலும் விரும்புவானா? மேலும் அவர்தாம் மரித்து மூன்றாம் நாளில் மீண்டும் உயிரோடு எழுவதை முன்னறிந்திருந்தார்.

[4] மத்தேயு 5:21-22, 27-28.

[5] மத்தேயு 22:36-40.

## இயேசு தான் மரிக்கும் நோக்கத்துடனேயே பிறந்ததாகச் கூறினார்

மரிப்பதற்கென்றே பிறந்தவர்

இயேசு தாம் மரித்து மீண்டும் உயிரோடெழுந்திருப்பது மிக அவசியமாயிருந்தது என்று சொன்னார். இதைக் குறித்து மூன்று வித்தியாசமான சம்பவங்களில் அவர் தமது சீடர்களுக்குக் கூறினார்.[6] மத்தேயு 16:21ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## இயேசு தன் ஆடுகளுக்காக தாம் மரிப்பதாகச் கூறினார்

இயேசுவின் காலத்தில் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை ஓநாய்களிடமிருந்து காக்கத் தங்கள் உயிரையும் கொடுக்க தயங்கமாட்டார்கள். தன் ஆடுகளுக்காக (அதாவது - விசுவாசிகளுக்காக) மரிப்பேன் என்று இயேசு சொன்னார். தன்னுடைய ஆடுகளுக்குப் பதிலாக தன்னுடைய ஜீவனையே கொடுக்கப்போகும் நாளை அவர் முன்னறிந்திருந்தார். யோவான் 10:11ஐ பார்க்கவும்.



ஒரு கிழக்கத்திய மேய்ப்பன்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

இறுதியாக அவருடைய இறப்பு அநேகரை மீட்கும் பொருளாகும் என்று இயேசு கூறுகிறார்.[7] அவர் இறப்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன் தன்னுடைய சீடர்களுக்கு அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் உதாரணமாகக் கொண்டு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுத்தார். அவர் அவைகளைச் சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் சின்னங்களாக உருவகப்படுத்திச்சொன்னார்: அதுமட்டுமின்றி, சீடர்களுக்கு அவரின் மரிக்கும் அன்பை நினைவுபடுத்தும் பூரண சின்னங்களாக அவைகள்; எடுத்துக் கொள்ளப்படவேண்டும்[8].

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவின் மரணத்தைக் குறித்து எழுதிய விளக்கத்தை 4வது பாடத்தில் பார்ப்போம்.



# நியாயந்தீர்க்க திரும்ப வருவேன் என்றார்.

குற்றம் இழைத்தவனை தண்டித்தல்

சட்டங்கள் எங்கு இருக்கின்றதோ அங்கு சட்டங்களின் கீழ்ப்படியாமைக்கு தக்க தண்டனைகள் உண்டு. ஆனால் நியாயந்தீர்க்க நியமிக்கப்பட்டவர்கள் தாங்களே உண்மையுள்ளவர்களாக இருப்பதில்லை, இப்படி அவர்களுடைய நேர்மையற்ற நிலையினால் தவறு செய்கிறார்கள் - சில நேரங்களில் அப்பாவிகள் தண்டிக்கப்படுவது மட்டுமல்ல, குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடுதலையாக்கப்படுவதுமுண்டு.

பூமியின் நீதிபதிகள் வெளியரங்கமான திருட்டு, போராட்டம், சண்டை இவைகளை மட்டுமே விசாரிக்கிறார்கள். ஆனால் நமக்குள் மறைந்திருக்கும் பாவங்களான, வெறுப்பு, பரிசுத்தமின்மை, பெருமை இவைகள் மனிதனால் தண்டிக்கப்படாமல் போகிறது. இவைகளுக்கு தீர்ப்பு கொடுக்கும்படி மனிதனை நியமித்தால் அவன் இப்படிப்பட்ட பாவங்கள் இல்லாத குற்றமற்றவனாக இருக்க வேண்டும்.

பரிபூரண நீதிபதி

எல்லா தவறான செயலும் கடவுளின் பார்வையில் பாவமாகவும் தண்டிக்கப்பட வேண்டியதுமாகும். ஆனால் இந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளக்கூடிய குற்றமற்றவன் யார்? நீதியாய் நியாயந்தீர்க்க உண்மையுள்ளவன் யார்? சூழ்நிலைகள்தான் நம் செயல்களுக்கு காரணம் என நினைத்துக்கொள்கிறார்கள். இயேசு ஒருவரே தகுதியான நபர். எந்தச் சாதாரண மனிதனும் தகுதியானவன் அல்ல. எனவே இயேசு இந்த காரியத்தைக் குறித்து என்ன கூறுகிறார் என்பதை சிந்திக்க வேண்டும்.

6 மத்தேயு 16:21, 17:22-23, 20:18-19.

7 மாற்கு 10:45 (பாடம் 4ஐ பார்க்கவும்).

8 லூக்கா 22:19-20.

### இயேசு தாமே இந்த உலகத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறேன் என்று கூறினார்.

ஒரு பெரிய கௌரவம்

இந்த உயர்ந்த மேன்மையை கடவுள் தனக்குத் தந்ததாக இயேசு சொன்னார். அவருடைய தகப்பன் பரலோகத்திலிருக்கிறார். யோவான் 5:22-23ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



அந்த தேவ மனிதனால் இருபக்கங்களையும் பார்க்கமுடியும்

இயேசு, 'நானே மனித குமாரனும்' மற்றும் 'தேவ குமாரனும்' என்று கூறினார். இவ்வாறு கூறுவது இவர் தம்மை முழுவதும் மனிதன் என அறிவித்தார். அவர் ஒரு மனிதனாக மனிதனுடைய சோதனைகளையும், கஷ்டங்களையும் மேன்மை பாராட்டினார். இவ்வாறு பாவமில்லாத மானிடனாய்,[9] முழுமையாய் புரிந்து கொண்டவராய், பூரணராக நியாயந்தீர்க்க வருவார். யோவான் 5:26-27ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### இயேசு, "தான் திரும்ப வரும்பொழுது இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பேன்" என்று கூறினார்.

இயேசு இந்த உலகத்தை உடனடியாக நியாயந்தீர்ப்பேன் என்று கூறவில்லை. அவர் நியாயந்தீர்க்க அல்ல அதை மீட்க வந்தேன் என்று கூறினார்.[10] ஆனால் அவர் ஒரு நாளினைப்பற்றியும் அந்த நாளில் அவர் நியாயந்தீர்க்கத் திரும்ப வருவதாகவும் கூறினார். எல்லா நாட்டு மக்களும் கூடி அவர் முன் நிற்பார்கள். அப்பொழுது அவர் மீட்கப்பட்டவர்களையும், மீட்கப்படாதவர்களையும் தனித்தனியாக பிரிப்பார். மத்தேயு 25:31, 32 பார்க்கவும்.

இயேசு திரும்ப வருகிறார்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

# முடிவாக

இயேசு மறு அவதாரத்தைப் பற்றி கூறவில்லை

இயேசு, உள்ளான மன மாற்றம் தேவை என்றும், அது தேவனுடைய ஆவியினால் மட்டுமே சாத்தியமாகும் என்றும் கூறினார். இந்த மன மாற்றம் ஒருவன் மறுபடியும் பிறப்பதைப் போன்று பெரிய அளவில் இருக்கும் என்றார். இந்தவித மாற்றம் இல்லாமல் பரலோகத்திற்குள் நுழைதல் என்பது இயலாதது என்றும் கூறினார்.[11] நீங்கள் இந்த மாற்றத்தில் அனுபவமடைந்திருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் கீழ்க்கண்ட இயேசுவின் உபதேசங்கள் அடங்கிய பாடத்தைப் பின்பற்ற விரும்புவீர்கள்.

---

9 மூன்றாம் பாடத்தை பார்க்கவும்

10 யோவான் 12:47

11 யோவான் 3:3-5.